தரத்திலில் சிறந்த
மான் - முயல்
வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஓடுகளையே
பாவியுங்கள்
மூ. தா. பொன்னம்பலம்
86, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493



பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 23 | பங்குனி 29 | ஜ. ஆகிர் 5 | இதழ் 60

யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 11-4-81


## சீனி விலை குறைந்தது!

(கொழும்பு)

சீனியின் விலை கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபா குறைக்கப்பட்டுள்ளது.

புதிய விலை குறைப்பு கடந்த நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதுவரை கிலோ 17 ரூபா 50 சதமாக இருந்த சீனி இப்போது 16 ரூபா 50 சதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

# 'குட்டிமணி' விசாரணையில்

# பொலிசாருக்கு புதிய தகவல்!

## 'முக்கிய நபர்கள் எந்நேரமும் கைதாகலாம்!

### கொள்ளைப்பணம் குறித்தும் சந்தேகம்

(கொழும்பு)

வடபகுதியில் நடைபெற்ற கொள்ளை - கொலைகள் தொடர்பாக புலன் விசாரணையில் ஈடுபட்டிருக்கும் விசேஷ துப்பறியும் பொலிஸாருக்கு இப்பொழுது கிடைத்திருக்கும் புதிய தகவல்களைத் தொடர்ந்து நீண்ட காலமாகத் தலைமறைவாக இருந்து வரும் சிலர் ஓரிரு தினங்களில் கைது செய்யப்படலாம் என்று பொலிஸ் வட்டாரங்கள் நேற்று நம்பிக்கை தெரிவித்தன.

கடந்த வாரம் மருந்தித்துறை பகுதியில் கைது செய்யப்பட்ட 'குட்டிமணியும்' அவரது சகாக்கள் எனக் கருதப்படும் இருவரும் பயனுள்ள சில தகவல்களை வெளியிட்டிருப்பதாகவும் இதனைத் தொடர்ந்து பொலிஸார் தேடும் முக்கிய நபர்கள் சிலர் வடபகுதியில் எந்த நேரமும் கைது செய்யப்படலாம் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் கூறின.

(8-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்களின்

### சம்பளப் பணத்திற்குப் பொலிஸ் பாதுகாப்பு!

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களது சம்பளத்தை வங்கிகளிலிருந்து பாடசாலைகளுக்கு எடுத்துச் செல்ல வழமைபோல் பொலிஸ் பாதுகாப்பு தொடர்ந்தும் வழங்கப்படும்.

வடமாநிலக் கல்வி அதிபதி இதுபற்றி வடமாகாண அதிபர் சங்கச் செயலாளருக்கு தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இதற்கான ஒழுங்குகளை வழமைபோல் பாடசாலை அதிபர்கள் செய்து கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


(8ம் பக்கம் பார்க்க)

### நிதி உதவி வழங்க மாணவர் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சுற்றுடலில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களின் விளைவாக நேரடியாக பாதிக்கப்பட்ட சிலருக்கு நிதி உதவி வழங்க யாழ். பல்கலைக்கழக மாணவர் முன்வந்திருக்கின்றனர்.

நேற்று நடைபெற்ற கூட்டத்தில் மாணவர் இம்முடிவை எடுத்தனர்.


[illegible] / பரீட்சை நிலையம் / CENTRE

J JAFFNA HINDU BALIKA VIDYALAYA, HALL NO.2, JAFFNA

ඉල්ලුම් කර ඇති විෂය අංක / விண்ணப்பித்த பாட எண்கள் / SUBJECT NOS. APPLIED FOR

| | | | |
|---|---|---|---|
| 08 | 11 | 16 | 17 |

№011857

### இந்த வித்தியாலயம் எங்கே இருக்கிறது?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இந்து 'பாலிக்க வித்தியாலயா' என்றொரு கல்லூரி எங்காவது இருக்கின்றதா?

க. பொ. த (உயர்தர) பரீட்சை எழுதவிருக்கும் சில மாணவிகளுக்கு பரீட்சை நிலையத்தின் பெயர் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சில மாணவிகளுக்கு வந்துள்ள பரீட்சை அனுமதி அட்டைகளிலேயே இவ்வாறு காணப்படுகின்றது.

இம் மாணவிகளின் கல்லூரியின் பெயர்'' ஜாஃப்னா ஹிண்டு லேடீஸ் கொலிஜ்'' என்று சரியாக முகவரியிடப்பட்டுள்ள அதேவேளை பரீட்சை எழுதவேண்டிய நிலையத்தின் பெயர் ''ஜாஃப்னா ஹிண்டு பாலிக்க வித்யாலயா'' என ஆங்கில எழுத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

''இந்து பாலிக்க வித்தியாலயா'' என சிங்களத்தில் மொழி பெயர்த்து ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார்கள் என்று தோன்றுகின்றது.

(8-ம் பக்கம் பார்க்க)


மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை

12-4-81 விசேட பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டத்தைக் கூட்டவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கிய ஏழு அதிகார சபை உறுப்பினர்களும் யு. என். பீ. அமைப்பாளரும் சமர்ப்பித்த மகஜர்கள் காரணமாகக் கௌரவ கூட்டுறவு அமைச்சர் அவர்களின் பணிப்புரைக்கமைய குறித்த கூட்டத்தைக் காலவரையின்றிப் பின்போடப்படவேண்டியுள்ளது என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்கத்தலைவர்

8840



சுவைப்பிரியர்களின் மனதில்

குதூகலம் —— •

ஆஹா என்ன சுவையென,
சுவைத்து மகிழ்ந்திட, நகரில்
நாகரிக சைவ உணவகம்

அமுதசுரபி

408, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
பஸ்நிலையம் முன்பாக நகருங்கள்!!



புதுவருடத்தை

முன்னிட்டு எங்கள் ஸ்தாபனத்தில் பாவனையாளர்களுக்கு ஐந்துவீதக்கழிவுடன் பாவனைப் பொருட்களை விற்பனை செய்கின்றோம்.

முக்கியமாக மக்களின் தேவையை முன்னிட்டு நாட்டரிசி கிலோ ரூ 4-75 ஆக விற்பனை செய்யப்படும் என்பதை பொதுமக்களுக்கு அறிவித்துக் கொள்கின்றோம்.

எங்களின் புதுவருட நல்வாழ்த்துக்களை எங்களின் வாடிக்கையாளருக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஏ. எஸ். ஆறுமுகம் அன் சன்ஸ்

பிரதான வீதி, ஊர்காவற்றுறை.

8850



விசேட பண்டிகையை முன்னிட்டு
பாட்டா பாதணிகள்

மலிவு விற்பனை

எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ்
யாழ்ப்பாணம். போன்: 284

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தச்சுவேலையந்திரம் Model C 35 Italy விபரங்களுக்கு உடுப்பிஹோட்டல் 134, கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம். 8829

முல்லைத்தீவு கோயில் குடியிருப்புப் பகுதியில் சென் மெரிஸ் றோட் இல் 2 பெரிய அறை ஆப்பீஸ் ரூம், முன் விறுந்தை, பின் விறுந்தை குசினியுடன் கிணறும் சேர்ந்த கல்வீட்டு வளவு 12 பரப்புக் காணியில் அடங்கியுள்ளது. மா, தென்னை போன்ற பிரயோசனங்கள் யாவும் அடங்கிய இவ்வீடு வளவு விற்பனைக்குண்டு. விலை மற்றும் விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்க: M. R. சௌர்தரநாயகம், இல. 1, சென்பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம். அல்லது A. பேதுருபிள்ளை, வியாபார நிலையம், P. W. D. றோட், முல்லைத்தீவு. (8818)

புதிய ஹொண்டா CD 200 இல. 82 ஸ்ரீ தொடர் இலக்கம் விற்பனைக்குஉண்டு. முகவரி; க. துரைராசா, 2-ம் ஒழுங்கை, கச்சாய் றோட், சாவகச்சேரி. (8846)

## தேவை

பளையில் தென்னங்காணி. காலபோகம் சிறுபோகம் விழையும் நெற்காணி பத்து ஏக்கருக்கு மேல் பரந்தன் கிளிநொச்சிப் பகுதியில் தேவை. யோசப், 13 ரயில்வே பாதைக்கு அருகாமையில், கோயில் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 7580. (8836)

ஆங்கிலம் தெரிந்த பெண் லிகிதர் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். மேர்வின்ஸ், 91/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (8841)

கொழும்பு 3, கொள்ளுப்பிட்டியிலுள்ள வீடு ஒன்றில் உதவியாக இருப்பதற்கு சுமார் 16 வயதுடைய பையன் அல்லது பெண் அல்லது எந்தப் பொறுப்புகளும் இல்லாத 40-50 வயதுக்கிடைப்பட்ட பெண் 16-4-81 முதல்வேலையை ஆரம்பிப்பதற்கு தேவை. தங்கும் இடம், உணவு, வருடத்திற்கு ஒருமுறை லீவில் செல்ல அனுமதியுடன் மாதாந்தம் ரூபா 150/- முதல் 200/- வரை ஊதியம் வழங்கப்படும். நற்சான்றிதழ் இருப்பின் அவற்றுடன் பிற்பகல் 2-00 மணிக்கு முன் அல்லது 4-00 மணிக்கு பின் உடன்நேரில் வரவும். 492, கே. கே. எஸ். வீதி, வண்ணார் பண்ணை கிழக்கு. ஒழுங்கு செய்து தருபவருக்கு ரூபா 50/- சன்மானம் வழங்கப்படும். 8814

## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் புனரமைக்கப்பட்ட கட்டிடத் திறப்பு விழா இம்மாதம் 13ம் திகதி நடைபெறவிருக்கிறது.

மேற்படி நிலையத்தின் போஷகர் டாக்டர் ந. பாலகிருஷ்ணன் நிலையக்கொடியை ஏற்றி வைத்து விழாவை ஆரம்பித்து வைப்பார்.

இக்கட்டிடப் புனரமைப்பு வேலை பொதுமக்களின் நிதி உதவி மற்றும் சிரமதானமுயற்சிகள் மூலம் நிறைவேற்றப் பட்டது குறிப்பிடத்தக்கது. (ச)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

மாவட்ட அபிவிருத்திச் சபை தொடர்பாக

# எம்முடன் மாறுபட்ட கொள்கைகளை அமரர் 'கதிர்' கொண்டிருக்கவில்லை!

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

"மாவட்டஅபிவிருத்திச்சபைத் தேர்தல் மூலம் திட்டமிட்ட குடியேற்றத்தை தவிர்க்கலாம் என எதிர்பார்க்கிறோம்.

இது தொடர்பான கூட்டணியின் முடிவுக்கு கட்டுப்பட்டவர் அமரர் கதிரவேலுப்பிள்ளை''.

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற அமரர் கதிரவேலுப்பிள்ளையின் அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

அமரர் "கதிரவேலுப்பிள்ளை எமது இயக்கத்துடன் மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டிருந்தார் என்று இன்று கூறப்படுகிறது. மாவட்ட சபை தொடர்பாக அவர் எம்முடன் மாறுபட்ட கொள்கை கொண்டிருப்பாரானால் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் திகதி பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கு முதல்நாள், வெளிநாட்டில் அப்போது இருந்த அவர் நாடு திரும்பியிருப்பாரா? மாவட்ட சபை மசோதா விவாதத்தில் கலந்து கொள்வதற்காகவே தாம் அவசரமாக நாடு திரும்பியதாகவும் அவர் என்னிடம் கூறினார்.

அவ்விவாதத்தில் நான் உரையாற்றுவதற்காகத் தயாரித்து வைத்திருந்த உரையை திரு. கதிரவேலுப்பிள்ளையும் பார்வையிட்டார்.

இயக்கத்தின் கட்டுக்கோப்பைக் பாதுகாப்பதிலும் அக்கறை கொண்டிருந்த அவர் தமிழ்ஈழ இலட்சியத்திலிருந்து தமிழர் கூட்டணி இம்மியளவும் விலகக்கூடாது என்பதிலும் அவர் மிகுந்த அக்கறையாக இருந்தார்''. (இ)

## பரிபாலனசபை பொதுக்கூட்டம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவுமடத்துவெளி பாலசுப்பிரமணியசுவாமி கோவில் பரிபாலன சபை வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 12ம்திகதி நடைபெறவுள்ளது.

ஆலய மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டம் சபைத் தலைவர் திரு. வ. வே. இளைய தம்பி தலைமையில் நடைபெறும். (கு)

## தனியார் அடைவுகடைகள் மக்கள்வங்கியால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கிஒரு பவுனுக்கு ஆயிரம் ரூபாவை அடைவுக்கு கொடுக்கஆரம்பித்ததிலிருந்து தனியார் அடைவுகடைகளுக்கு பலத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மக்கள் வங்கியின் இத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதிலிருந்து தனியார் அடைவு கடைகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

பவுணுக்கு ஆயிரம் ரூபாவை வழங்கும் மக்கள் வங்கி ஆகக்கூடிய தொகையாக ரூபா பத்தாயிரத்தையும் வழங்கி வருகிறது. இதே வேளை தனியார்அடைவுகடைகளை எடுக்கப்படும்ஐந்துவீதகமிஷனையும் மக்கள் வங்கி பெறுவதில்லையாம்.

யாழ்ப்பாணம், வண்ணை/ஸ்ரீ வேங்கடேச
வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

### வருடப்பிறப்பு விசேட பூசை

துர்மதி வருடப்பிறப்பு தினம்
13-4-1981 திங்கட்கிழமை பி. ப. 5-17 மணிக்கு
விசேட பூசை நடைபெறும்

(8844) தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்.

யாழ்ப்பாணம், வண்ணை/ஸ்ரீ வேங்கடேச
வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

### ஸ்ரீ ராம நவமி உற்சவம்

12-4-1981 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 6-30 மணிக்கு
ஸ்ரீ ராம நவமி உற்சவம்
நடைபெறும்.

(8843) தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்

### நன்றி நவிலல்

திரு. S. கந்தையா

8-3-1981ல் சிவபதமடைந்த திரு. S. கந்தையாவின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட நண்பர்க்கும், உறவினர்க்கும் மற்றும் அவர் சுகவீனமுற்றிருந்த நாட்களில் அவரைக் கவனித்த Jaffna Private Hospitals Ltdஐச் சேர்ந்த டாக்டர்களுக்கும் தாதிமார்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

31, நல்லூர் குறுக்குத்தெரு,
நல்லூர்.

(8815)

## இன்றைய பலன்

பங்குனிமாதம் 29-ம் திகதி

சனிக்கிழமை

(11-4-1981))

மேடம்: தற்பெருமைமூலம் தடுமாற்றம் ஏற்படும், கண் துடைப்பு வேலை நடக்கும், கவனம் செலுத்தவும், பெரியோரை பகைத்துக்கொள்ளாமல் பொறுமையைப் பேணி நடக்கவும்.

இடபம்: தாய்வழியால் பெருமைகள் சேரும், தனத்துடன் வாழ்வும் கிடைக்கும், எதிரிகள்கூட உங்களை வரவேற்பார்கள், மருத்துவத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு இன்று மகத்தான தினம்.

மிதுனம்: இன்பத்தின் அணைப்பில் இதயத்தைப் பறிகொடுப்பீர்கள், பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் காதல் கணை தாக்கும், குடும்பத்தவர்களுக்கும் சுவையான சம்பவங்கள் உண்டு.

கடகம்: கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும், வாகனம் செலுத்துவோர் அதிக நிதானத்துடன் இருக்கவும், பிரயாணத்தின்போதுபொருள் தவறக்கூடும் தொழில்புரியும் இடத்தில் பொறுமை வேண்டும்.

சிங்கம்: பெண்களுடனான தொடர்புகள் பெருகும், பிரமச்சாரிகள் வாழ்க்கையில் காதல்கணை தாக்கும், கவர்ச்சிப் பொருட்களில் அதிக ஆர்வம் ஏற்படும், மனநிறைவும் ஏற்படும்.

கன்னி; எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும், நண்பர்கள்மூலம் நன்மையடைவதற்கு இடமுண்டு, கூட்டு வியாபாரத்தில் மோசடி நடைபெறலாம், நன்றாகச் சிந்தித்தபின் செயலாற்றுக.

துலாம்: இரக்கசிந்தை மேலிடும். பொதுப்பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய இடத்துத் தொடர்பு ஏற்படுவதற்கும் இடமுண்டு, சிலர் வேற்று விவகாரங்களில் ஈடுபடுவார்கள். புண்ணியமான தினம்.

விருச்சிகம்: தொழில்துறையில் வெற்றி கிடைக்கும், மேலதிகாரிகளின் பாராட்டுக்கு இலக்காவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடல்கடந்த பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம், சிறப்பான தினம்.

தனுசு; பொருளாதார நிலை சீரடையும், சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு, பத்திரிகையாளரின் வேதனம் உயர்த்தப்படலாம், வெளியூரிலிருந்து செய்தி கிடைக்கும்.

மகரம்: இன்று எதிலும் நிச்சயமற்ற நிலை தென்படும், மனதில் விரக்திமனப்பான்மை தலைதூக்கும், உணர்ச்சிவசப்படுவதால் வேண்டாத விளைவுகள் உருவாகும், மனஅடக்கம் நன்று.

கும்பம்: பேச்சுவார்த்தைகளில் உணர்ச்சிவசப்படாதிருப்பது விரும்பத்தக்கது, அவசர முடிவின்மூலம் விரோதத்தை தேடிக்கொள்வீர்கள், துதியாடிக்கொண்டே சிலர் துரோகச் செயலில் ஈடுபடுவார்கள்.

மீனம்: நிதியில் அபிவிருத்தி காணப்படும், பூர்வீகச் சொத்து ஒன்று உமக்குக் கிடைக்கக்கூடும், புண்ணிய விருத்திக்கு இடமுண்டு, உடல் நிலையில் அபிவிருத்தி தென்படும், திருப்திகரமான நாள்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

## மருதனமடம் ஆசிரமத்தில்

(அரியாலை)

மருதனமடம் கிறிஸ்தசேவா ஆசிரமத்தில் பரிசுத்த வாரத்தையொட்டி பல ஆராதனைகள் விசேஷமாக நடைபெறவிருக்கின்றன.

இம்மாதம் 12ந் திகதி குருத்தோலை ஞாயிறும். அன்று காலை பரிசுத்த நற்கருணை ஆராதனையும், 13ந் திகதி முதல் 15ந் திகதிவரை மாலையில் சிலுவைத் தியானமும், 16ந் திகதி பெரிய வியாழக்கிழமை மாலை பரிசுத்த நற்கருணை ஆராதனையும், 17ந் திகதி பெரிய வெள்ளிக்கிழமை காலையிலிருந்து மாலைவரை அமைதியும் தியானமும் நடைபெறவிருக்கின்றன.

19ந் திகதி ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்த திருநாளுக்கான பரிசுத்த நற்கருணை ஆராதனை காலையிலும் மாலை யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் உயிர்த்தெழுந்த பஜனையும் நடைபெறவிருக்கின்றன.

இவ்வாராதனைகளுக்கான ஏற்பாடுகளை ஆசிரமத் தலைவர் அருட்திரு சேவக் சாம் அல்பிரட் அடிகளார் செய்துள்ளார்கள். (அ)

## எறிபந்தாட்டப் போட்டி

(அரியாலை)

அரியாலை 62வது சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தையொட்டி அரியாலைமத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றபெண்களுக்கான எறிபந்தாட்டப்போட்டியின் இறுதிப்போட்டியில் அரியாலை சரஸ்வதி மத்திய நூல்நிலைய "பி"பிரிவுக்கோஷ்டி வெற்றியீட்டியது. இக்குழுவுக்கு செல்வி ச. சோபனா தலைமை தாங்கினார். (ஈ)

## நெல் கொள்வனவு

(திருகோணமலை)

திருகோணமலை நெற்சந்தைப்படுத்தும் சபை கடந்த மாதம் 3,50,000 புசல்நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்துள்ளது.

நெற்சந்தைப்படுத்தும் சபை ஒரு புசல் நெல்லுக்கு, 54ரூபா 34 சதம் வழங்குகிறது. (து)

# பாக். அணுஆயுதத்தை பயன்படுத்துவது இந்தியத்துணைக் கண்டத்திற்கு அச்சுறுத்தல்!

## பிரதமர் இந்திரா எச்சரிக்கை

புதுடில்லி, ஏப். 10

"பாகிஸ்தான் அணு ஆயுதக் கருவிகளைப் பயன்படுத்துவது இந்தியத் துணைக்கண்டத்தில் மிகப் பாரதூரமான, கடுமையான, மாற்றமுடியாத விளைவுகளை ஏற்படுத்தும்"

மேற்கண்டவாறு இந்தியப் பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி லோகசபையில் பாதுகாப்பு சம்பந்தமான செலவினங்கள் தொடர்பாக நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து பேசுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

அணுஆயுதத்தை சமாதான நோக்கத்திற்குப் பயன்படுத்தவே இந்தியா விரும்புகிறது. பாகிஸ்தானிற்கு அமெரிக்கா ஆயுத உதவிவழங்கவிருப்பது இந்தியாவிற்கு அச்சுறுத்தலாகவுள்ளது இதுகுறித்து இந்திய அரசு ஆராய்ந்துவருகிறது

ஆப்கானிஸ்தான், வங்காளக் குடாப் பிரதேசங்களில் போர்ச்சூழறல் மீண்டும் தலைதூக்கியுள்ளது இந்தியாவின் ஆயுதப்படைகள் திறமையாகத் தமது பணியை ஆற்றி வருகின்றன

சிம்லா உடன்படிக்கையை யடுத்து பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு அங்கு இந்திய வெளியுறவு அமைச்சர் செல்லவுள்ளார்" என்றார். (வெ)



எரிசாராய விவகாரம்:

## ஆணையை எரித்தவர்கள் எச்சரித்து விடுதலை!

சென்னை, ஏப். 10

எரிசாராயவிவகாரம்குறித்து ஆராயநியமிக்கப்பட்ட கைலாசம் கமிஷன் அரச ஆணையை கும்பகோணத்தில் எரித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட தி மு. க. முன்னாள் அமைச்சர் நாராயணசாமியும், 162 தி. மு. க. தொண்டர்களும் நேற்று கும்பகோணம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு நீதிமன்றம் கலையும்வரை மறியல்தண்டனை விதித்த மாஜிஸ்திரேட்பின்னர் எச்சரித்து விடுதலைசெய்தார்.

இதே குற்றச்சாட்டின்பேரில் திருவிடைமதூரில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் சட்டமேலவை உறுப்பினர் கோசிமணிக்கும் 192 தி. மு. க. தொண்டர்களுக்கும்இதேதண்டனை விதிக்கப்பட்டது. (வெ)

## கம்யூனிஸ்ட் நாடுகளில் பொருளாதாரப் பிரச்னை

### சோவியத் ஜனாதிபதி பிரஷ்னேவ்

பிராக், ஏப். 10

கம்யூனிஸ்ட் நாடுகள் தமது பொருளாதாரப் பிரச்னைகளை வெற்றிகரமாகத் தீர்க்கவேண்டும். இந்நாடுகள் பொருளாதாரப் பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளன"

மேற்கண்டவாறு சோவியத் ஜனாதிபதி திரு. பிரஷ்னேவ் பிராக்கில் நடைபெற்றுவரும் செக்கோஸ்லவாக்கிய கம்யூனிஸ்ட்கட்சியின் உச்சிமகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"உற்பத்தியை அதிகரித்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டும். போலந்தில் சோவியத்யூனியன் தலையிடும்பட்சத்தில் அதற்கு செக்கோஸ்லவாக்கியாவும் ஏனைய கம்யூனிஸ்ட் நாடுகளிடம் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வார்சோ ஒப்பந்தநாடுகளின் எந்தவொரு கம்யூனிஸ நாட்டிற்கும் ஆபத்து ஏற்படும்பட்சத்தில் ஏனைய கம்யூனிஸ நாடுகள் அவற்றிற்கு உதவிசெய்வதில் தவறில்லை" என்றார். (வெ)

## ஜவுளி ஆலைகளின் முன்னேற்றம்

(கொழும்பு)

அரசுக்குச்சொந்தமான துல்ஹிரியவெயங்கொட, பூகொட, மத்தேகம, மின்னேரியா ஆகிய இடங்களிலுள்ள ஜவுளி ஆலைகள் சர்வதேச நிறுவனங்களின் நிர்வாகத்தின் கீழ் அதிக முன்னேற்றம் அடைந்துள்ளதாக புடவைக் கைத்தொழில் அமைச்சர் திரு விஜயபால மெண்டிஸ் அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

ஜவுளிகளின் உற்பத்தித்தரமும், செயற்திறமையும்உயர்ந்துள்ளது என்றும் இலங்கை வரலாற்றில் முதல்முறையாக இந்த ஜவுளிஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி நூலினை வங்காள தேசத்துக்கு ஏற்றுமதி செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த ஏற்றுமதியின் மூலம் 4 75,000 டாலர் வருமானம் இலங்கைக்கு கிடைத்துள்ளது ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட நல்லதரமான ஜவுளிகள் புதுவருடத்தின்பொருட்டு பொதுமக்களின் பாவனைக்காக விற்கப்படுகின்றது. (து)

## இஸ்ரேலியத் துருப்புக்கள் லெபனன் மீது தாக்குதல்!

பெய்ரூட், ஏப் 10

இஸ்ரேலியத் துருப்புக்கள் லெபனனின் தெற்குப் பிராந்தியத்திற்குள் ஊடுருவல் செய்து பலஸ்தீனியர்களுடனும், லெபனனிலுள்ள இடதுசாரித் துருப்புகளுடனும் கடும் சண்டையில் நேற்று ஈடுபட்டதாக அறிவிக்கப்பட்டது.

இப்பிராந்தியத்தில் இஸ்ரேலியத் துருப்புக்கள் ஹெலிகாப்டரில் சென்று கடும் தாக்குதல்களை மேற்கொண்டன. இவ்யுத்தத்தில் பலஸ்தீனியர்கள் இஸ்ரேலிய துருப்புக்களுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் போராடி வருகின்றனர்.

பெய்ரூட்டின் தெற்குப் பகுதியில் இஸ்ரேலிய ஹெலிகாப்டர்களிலிருந்து தீப்பந்தங்கள் வீசப்படுகின்றன. (வெ)

## பிரிவுபசாரம்

(மன்னார்)

மன்னார் உதவிஅரசாங்கஅதிபராகக் கடமையாற்றி இம்மாதம் முதல் யாழ்.நகர உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. கே மாணிக்கவாசகருக்கு புதுக்கமம் பொதுமக்கள் பிரிவுபசாரம் அளித்து கௌரவித்தனர்.

## கடத்தல் பிடிபட்டது

(கொழும்பு)

கழுத்துறை அரசினர் சாராயக் குதத்திலிருந்து 4800 போத்தல் சாராயம், மத்துகம வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையத்துக்கு அனுமதிப்பத்திரம் இல்லாது கடத்தப்படும்பொழுது மத்துகம பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

## அமெரிக்க பாதுகாப்புச் செலவிற்கு பெரும் தொகைப்பணம் ஒதுக்கீடு!

வாஷிங்டன், ஏப். 10

அமெரிக்காவின் இராணுவச் செலவுக்கான குழு, ஜனாதிபதி ரீகன் கேட்டதைவிட பெரும் தொகைப்பணத்தை அடுத்த நாலாண்டு காலத்தில், அமெரிக்கா பாதுகாப்புச்செலவுக்கென ஒதுக்கியுள்ளது.

குடியரசுக்கட்சியின் அதிகாரத்தில் இருக்கும் இக்குழு, இவ்வாண்டு இராணுவச்செலவுகளுக்கென 16,300 கோடி டாலரை ஒதுக்கீடுசெய்துள்ளது. அடுத்தாண்டிற்கு 19500 கோடி டாலர்களையும் 1983ம் ஆண்டிற்கு 21,800 கோடி டாலர்களையும், 1984ம் ஆண்டிற்கு 26,300 கோடி டாலர்களையும் இராணுவச்செலவுகளுக்கென ஒதுக்கீடுசெய்துள்ளது

ஜனாதிபதி ரீகன் கேட்டதைவிட இச் செனட்சபைக்குழு சுமார் 1500 கோடி டாலர்களைக் கூடுதலாக வழங்கியுள்ளது.

சோவியத்யூனியன் அதன் படைப்பலத்தை அதிகரித்து வரும்வேளையில அமெரிக்கா இராணுவத்துறையில் பலவீனமாக இருக்கக்கூடாதென்பதற்காகவே இந் நடவடிக்கையை அமெரிக்க செனட்சபை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயகக்கட்சி அங்கத்தவரொருவர், பெருந்தொகைப் பணத்தை இராணுவச்செலவுகளுக்கு ஒதுக்கீடுசெய்வதால் அடுத்த நாலாண்டுகளில் அமெரிக்காவின் வரவுசெலவுத்திட்டத்தில் துண்டுவிழும்தொகை அதிகரிக்குமென்று தெரிவித்துள்ளார். (வெ)

## உலக தெலுங்கு மகாநாட்டுக்கு சென்னையிலிருந்துகுழு

சென்னை, ஏப் 10

மலேசியாவில் இம்மாதம் 14ந் திகதி ஆரம்பமாகும் இரண்டாவது உலக தெலுங்கு மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக 181 பிரதிநிதிகளைக் கொண்ட முதலாவது குழு சென்னையிலிருந்து நேற்று கோலாலம்பூர் புறப்பட்டது (வெ

## சட்டமன்ற விடுதியில் வெடிகுண்டு?

சென்னை, ஏப் 10

சென்னை சட்டமன்ற விடுதியில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலைத்தொடர்ந்து பொலிசார் சோதனையிட்ட பொழுது அங்கு வெடிகுண்டு எதுவும் காணப்படவில்லை.

இதனைத்தொடர்ந்து வெளியார் எவரையும் சட்டமன்ற விடுதியில் தங்க அனுமதிக்க வேண்டாமென்று தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் திரு ராஜாராம் உத்தரவிட்டுள்ளார்.

## தீவக இலக்கிய பேரவை

(ஊர்காவற்றுறை)

தீவகத்தின் கலை, இலக்கிய முயற்சிக்கு உதவவும் தரமான இலக்கியப் பரம்பரையை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு தீவக இலக்கியப் பேரவை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதன் அங்குரார்ப் பணக் கூட்டம் இம்மாதம் 13ந்திகதி ஊர்காவற்றுறை புனித மரியாள் மகாவித்தியாலய மண்டபத்தில் திரு எஸ். குகநாதன் தலைமையில் நடைபெறும் கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# "வலதுகுறைந்த பிள்ளைகள் ஏன் பிறக்கிறார்கள்?"

## கல்லூரி அதிபர் விளக்குகிறார்

(அரியாலை)

"நெருங்கிய உறவினரிடையே விவாகம் செய்வதாலும், தாய் கர்ப்பிணியாயிருக்கும் காலத்தில் சின்னமுத்து நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டிருப்பதாலும், அவர்கள் அதிக மருந்துகளை உட்கொள்வதினாலும் போதிய ஊட்டச்சத்து இல்லாமையினாலும், பெற்றோரின் பரம்பரையில் முன்பு வலது குறைந்த குழந்தைகள் பிறந்திருந்தாலும் வலதுகுறைந்தபிள்ளைகள் பிறக்கின்றன"

இவ்வாறு கைதடி நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன், இழந்தோர் பாடசாலை அதிபர் திரு ஜே எஸ். டேவிட், யாழ்ப்பாண கிறிஸ்தவ திருப்பணியாளர் தோழமைக் கூட்டத்தில் "வலது குறைந்த பிள்ளைகள் பிறப்பதை தவிர்க்க தம்பதிகள் அறிந்திருக்க வேண்டிய ஆலோசனைகள்" என்பது பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண அர்ச். டீக்கன் அருட்திரு. சாம் டி. ஹேரிங்டன் அடிகளாரால் கூட்டப்பட்ட இக்கூட்டம், கைதடி நவில்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. டேவிட் தொடர்ந்து பேசுகையில், "விழிப்புலன் இழந்தவர்களையும், அங்கவீனர்களையும், வளர்ச்சியற்ற அங்கவீனமுடையவர்களையும், பார்த்து நாம் அவர்களை வலதுகுறைந்தோர் என்று கூறிவருகிறோம். செவிப்புலன் இழந்தவர்களை மூளையில் பின் தங்கியவர்கள் என்று கூறும் நாம், சரீரத்தில்குறைவான அங்கவீனமானவர்களைமூளையில் பின் தங்கியவர்கள் என்று கூறமுடியாது. வலது குறைந்தவர்கள் இருக்கும் குடும்பமே வலது குறைந்த குடும்பமாகக் கருதப்படும் இக்குடும்பத்தில் வலது குறைந்து இருக்கும் பிள்ளை மற்றவர்களிடமிருந்து தனிப்பட்டுப் போகிற நிலைமையையும், பொறுமையை இழக்கும் அவலநிலையையும், மனச்சோர்வையும் கொண்டதாகவும் இருக்கிறது. இப்பிள்ளைகள் குறித்து எமக்குப் பின்தங்கிய மனோநிலை ஏற்படுகிறது. இப்படியான குறைபாடுகளையுடைய பிள்ளைகளை நாம் சமுதாயத்தில் மனிதர்களாகவும் நமது சமூகத்தவர்களாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்பிள்ளைகளை ஒதுக்கி வைக்காது ஏனைய பிள்ளைகளுடன் சேர்ந்து பழகவும், படிக்கவும், உரையாடவும் சந்தர்ப்பங்கள் கொடுக்க வேண்டும். இதன் மூலம் இவர்களது மனோநிலையை வளர்ச்சியடையச் செய்வதுடன் தாமும் சமூகத்தில் ஓர் அங்கம்என்ற மனோநிலையையும்ஏற்படுத்தமுடியும். இச் சிறுவர்களை சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக்க கிறிஸ்தவ திருப்பணியாளர்களும் தமது கடமையைச்செய்யமுன்வரவேண்டும். அத்துடன் திருமணச்சடங்குகளை நிறைவேற்றும் திருப்பணியாளர்கள் புதிய தம்பதிகளுக்கு ஆலோசனைகளும் கூறவேண்டும்" என்றார்.

வலதுகுறைந்தோரின் புனர்வாழ்வு சம்பந்தமான மாதிரி வகுப்புக்கள் இங்கு நடாத்திக் காண்பிக்கப்பட்டன. (ஈ)

## லண்டன் பரீட்சை

(கொழும்பு)

லண்டன் க. பொ. த. (உயர்தர) பரீட்சை ஜூன் மாதம் 1ம் திகதி நடைபெறவிருக்கிறது சுமார் 250 பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள். (நு)

**மணிவாக்கு**

நல்வினையாற்றுமளவு ஒருவன் உள்ளத்தினுள் உறுதிபெறுகிறான். தீவினையேஉள்ளத்தைக்குலைக்கிறது.
— அருள்விருந்து.

# நமது நோக்கு

## தேசிய அபிவிருத்தியும் யாழ்மக்களின்ஒத்துழைப்பும்

'யாழ்ப்பாண மக்களின் ஒத்துழைப்பின்றி நாட்டைஅபிவிருத்திசெய்ய முடியாது. இந்த நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு சகல இனங்களும் ஐக்கியப்பட்டுத் தேசிய ரீதியில் செயலாற்றவேண்டும்.'

முந்தநாள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அமைச்சர் திரு. அத்துலத்முதலி இவ்வாறு பேசியிருக்கிறார். இப்பேச்சின் முக்கியத்துவம் அதன் சந்தர்ப்பத்திலே தங்கியிருப்பதை நாம் விளக்கமுயல்கின்றோம்.

1947-ல் இலங்கைக்குப் பாராளுமன்ற ஆட்சிமுறை அமுலுக்கு வந்தபோது, சகல இன, மத பிரதிநிதிகள் கொண்ட ஐ. தே. கட்சி ஆட்சிக்கு வந்ததை இங்குகுறிப்பிடுவது பொருத்தமாகும்.

இத் தேசியக் கட்சியைக் கட்டி எழுப்பிய இலங்கையின் முதலாவது பிரதமர் அன்று - 1947-ல் என்ன சொன்னாரோ அதனையே 1981-ல் — அமைச்சர் அத்துலத்முதலி இன்று கூறுகின்றார்.

அன்றுதொடக்கம் இன்று வரைக்கும் நடந்தேறிய நாட்டின் வரலாறு, இன்று அமைச்சரின் கூற்றுக்கு எவ்வித ஆதாரமுமளிக்க வல்லதாகக் காணப்படவில்லை.

அமைச்சர் அத்துலத்முதலி யாழ்ப்பாணத் தொகுதிக்கான ஐ. தே. க. அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார். யாழ். மாவட்டத்திலுள்ள பதினொரு தேர்தல் தொகுதிகளிலுள்ள கட்சி இணைப்பாளர்கள் அடங்கிய மகாநாடொன்றில் பேசிய பேச்சையே நாம் குறிப்பிடுகின்றோம்.

1947ல் யாழ் தொகுதியில் ஐ. தே. கட்சி சாரியில் போட்டியிட்ட அருணாசலம் மகாதேவாவை தோற்கடித்தவர், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம். அவரும் பின்பு ஐ. தே. கட்சியில் சேர்ந்து அமைச்சரானதும் தமிழரசுக்கட்சி வலுப்பெற்றது.

தமிழ்க்காங்கிரஸ், தமிழரசுக்கட்சி இரண்டாகவும், ஒன்றாக இணைந்த கூட்டணியும் தமிழ் மக்கள் இழந்த உரிமைகளைப் பெற்றெடுக்க யாழ்ப்பாணப்பகுதி மக்கள் மட்டுமல்ல இலங்கை வாழ் தமிழ் மக்களின் பேரில் இன்றும் போராடி வருகின்றன.

அன்று ஐ தே. கட்சியை நம்பி மோசம்போன தமிழ் மக்கள், இன்று அக்கட்சியில் நம்பிக்கை வைக்க முடியுமானால்- அதனை ஒரு தேசியக்கட்சியாகக் கருத முடியுமானால், தமிழ் மக்கள் சார்பில் கட்சி எதுவும் இருக்கவேண்டிய அவசியம் ஏற்படமாட்டாது.

எனவேஅபிவிருத்தியென்றுலென்ன, தமிழ் மக்களின் உரிமைகள் என்றுலென்ன யாழ்ப்பாண மக்கள் தமிழ் மக்கள் விவகாரங்களையே பெரிதாக மதிக்கின்றனர். அவை சுமுகமாகத் தீர்க்கப்பட்டால் தேசிய ரீதியில் தொழிற்படுவதற்கு எவ்விதத்திலும் தயங்கமாட்டார்களென்பது தெளிவு.

1947ல் இருந்த நிலையிலிருந்து இவ்வளவு தூரம், இவ்வளவு காலம் கதியற்றிருக்கும் தமிழ் சமூகத்தை தேசிய அபிவிருத்தியென்ற அடிப்படையில் பிரிக்கும் செயல் எதுவும் தரமான அரசியல் தந்திரமாகாது.

## பார்த்தசாரதியின் பரிதாபமரணம்

இந்தியாவின் அஸ்ஸாம் மாநிலம், மத்திய அரசின் நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடி வருவது வாசகர்களுக்குத் தெரிந்த விடயம். இப் போராட்டம் மாணவர் போராட்டமாகவே வலுப்பெற்றுவந்தது.

இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி, நியாயமற்ற கோரிக்கைகளுக்கு இடமளிக்காது, திடமான முடிவுகளைமாநில அரசு தொழிற்படுத்த எல்லாவித அதிகாரத்தையும் வழங்கிவந்தார்.

அமரர் பார்த்தசாரதி ஒரு ஐ. ஏ. எஸ், அதிகாரி; திறமையுடையவரும் கண்டிப்பானவருமெனக் கூறப்படுகின்றது.

மேற்கு அஸ்ஸாமில் எண்ணெய் சுற்றுகையை எதிர்த்து வந்த 44 வயதுடையபார்த்தசாரதி தமது அலுவலகத்திலே பயங்கரவாதிகள் வைத்த வெடிகுண்டுக்குப் பலியானார்.

சமூகவிரோத சக்திகளின் இந்த மிருகத்தனமான தாக்குதலை மாணவர் சங்கம் வன்மையாகக் கண்டித்திருப்பது, இந்தப் பரிதாப சம்பவத்தின் ஒரு நாகரிகமான அம்சம்; இது சதிகாரர்களின் வேலையென்றும் மாணவரின் எதிர்ப்பு இயக்கத்துக்கு மாசுகற்பிக்கும் நோக்குடன் இது நடைபெற்றதாகவும் சங்கத்தலைவர் தெரிவித்திருக்கிறார்.

இறந்த அதிகாரியின் மனைவிக்கும் தாய் தந்தையருக்கும், திருமதி இந்திரா காந்திதொடக்கம், மாநில அமைச்சர்கள் அதிகாரிகள் பலர் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்ததோடு அவருடைய மனைவிக்கும் இரண்டு குழந்தைகளுக்கும் உடனடியாக 50,000 ரூபா வழங்கினர்.

பயங்கரவாதம் ஆண்டவனைப்போல் தூணிலும் துரும்பிலும்.

## கலைவிழாவும் பொருட்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவு மகளிர் குழுக்களின் புத்தாண்டு உயிர்த்த ஞாயிறு கலைவிழாவும் பொருட்காட்சி விற்பனையும் இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

மகளிர் குழுக்கள் தயாரித்த உணவு உற்பத்திப் பொருட்கள், சிறு கைத்தொழில், தைத்த ஆடைகள் என்பன இன்று காலை முதல் பொருட்காட்சியில் வைக்கப்படும். இரவு கலைநிகழ்ச்சிகள் இடம் பெறும். (கு)

# அரசியல்வாதியும் பத்திரிகையாளனும்

"பத்திரிகையாளர்களும், அரசியல் வாதிகளும் ஒத்துழைக்க வேண்டியவர்கள். ஆனால் இவர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள். இவர்கள் இருவருமே திமிர்பிடித்தவர்கள்! ஒரு அரசியல் வாதியை எத்தனைவருடங்கள் நல்ல முறையில் எழுதிவந்தாலும் ஒரு நேரம் சிறிது அவரைப் பற்றிச் சற்றுமாறாக எழுதிவிட்டால் போதும் அவர் பழையவற்றையெல்லாம் மறந்துவிடுவார். அந்தப் பத்திரிகையாளனைப் பற்றித் தெரியாதா என்று மனமளவென்று பொரிந்துதள்ளி விடுவார்.

தேர்தலுக்கு முன் அரசியல்வாதி பத்திரிகையாளனின் உதவியையும் ஒத்துழைப்பையும் நாடுவார். பத்திரிகையாளனை விருந்துக்கு அழைப்பார். இடையிடையே சும்மா சந்திக்கவும் கூப்பிடுவார். தேர்தல் முடிந்து பெற்றிவெற்றதும். அந்த வெற்றிதனது முயற்சியினாலும் தனது உழைப்பினாலும்தான் கிடைத்ததென்று கூறுவார். எத்தனை மைல்கள் தினமும் நடந்திருப்பேன், எத்தனை பேரைச் சந்தித்துப்பேசியிருப்பேன், எத்தனை இரவுகள் விழித்திருப்பேன், வேறுயாருடைய உதவியும் ஒத்துழைப்புமில்லாமலேயே நான் வெற்றி பெற்றிருக்கிறேன் என்று அரசியல்வாதி பெருமையாகக்கூறிக் கொள்ளுவார்"

பத்திரிகையாளனாக இருந்து இன்று அரசியல்வாதியாகஇருக்கும்ராஜாங்கஅமைச்சர் திரு. ஆனந்ததிஸ்ஸ டி. அல்விஸ்தான் இப்படி பத்திரிகையாளனையும் அரசியல்வாதியையும் பற்றிக் கூறினார்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டுப்பத்திரிகை நிருபர்கள் சங்கம் தப்ரபேன் ஹோட்டலில் அமைச்சரின் இந்த உரைக்கு ஏற்பாடு செய்திருந்தது

— எஸ். எம். ஜி. —

பிரபல பத்திரிகையாளரும் "ட்ரிபியூன்" ஆசிரியருமான திரு. எஸ். பி, அமரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ராஜாங்க அமைச்சர் சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேல பேசினார்.

இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படவில்லையென்றும் அது இங்கு தாராளமாக இருப்பதாகவும் குறிப்பிட்ட ராஜாங்க அமைச்சர் இதற்கு ஆசிய நாடுகள் பலவற்றுடனும் இலங்கையை ஒப்பிட்டுக் காட்டினார்.

இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் எந்த அளவுக்கு இருக்கிறதென்பதற்கு உதாரணமாக சில தினங்களுக்குமுன் ஒரு எதிர்க்கட்சி சிங்களப் பத்திரிகை அமெரிக்க ஜனதிபதி றேகன் சுடப்பட்ட கொலை முயற்சி பற்றிய செய்தியை வெளியிட்டு இறுதியில் இங்கும் இப்படி நடைபெறலாமென்று எழுதியிருந்தது, ஒருவர் மீது இப்படியான முயற்சி இங்கும் நடைபெறலாமென்றுமறைமுகமாக அந்தச் செய்தியில் எழுதப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டிய ராஜாங்க அமைச்சர், அதை எழுதியவரும் வெளியிட்டவரும் தங்கள் வார்த்தைக்கு வேறு வியாக்கியானம் கொடுத்துத் தப்பிவிடலாம் என்று கூறிவிட்டு பத்திரிகைச் சுதந்திரம் இங்கு எந்த அளவுக்கு பயன்படுத்தப்படுகிறது பார்த்தீர்களா என்று கேட்டார்.

இலங்கையிலுள்ள இரண்டு பெரிய பத்திரிகை நிறுவனங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருப்பது பற்றியும் குறிப்பிட்ட அமைச்சர் இது நல்லதல்லவென்றும் இதற்கு ஏதாவது வழிகாணப்பட வேண்டுமென்றும் கூறினார்.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகை நல்லமுறையில் தயாரித்துத் தரும் செய்

(5-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## 'தமிழ்ப்பணி' ஒலிபரப்புக்கு முதலிடம்

தஞ்சாவூர் வானொலி கேட்போர் கழகம் சமீபத்தில் உலகத் தமிழ் ஒலிபரப்புகளில் சிறந்ததைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கெடுப்புநடாத்தியது. இந்தக் கணிப்பில் மணிலாவிலிருந்து ஒலிபரப்பாகும் 'தமிழ்ப்பணி' முதல் இடத்தைப்பெற்றது. இரண்டாம் இடம் இலங்கைவானொலிக்கும் மூன்றாம் இடம் பி. பி. ஸி. தமிழோசைக்கும் கிடைத்தன.

'தமிழ்ப்பணி' ஒலிபரப்பு முழுமனித வளர்ச்சிக்கு ஏற்ற நிகழ்ச்சிகளை அளிப்பதில்சிறந்து விளங்குகிறது, பல நாடுகளில் பரந்துவாழும் தமிழ்மக்களின் உணர்வுகளை இணைக்கும் பாலமாகவும் இது சேவையாற்றுகிறது. தமிழ் உணர்வுகொண்டோர் அனைவரும் இந்த ஒலிபரப்பைக் கேட்கவேண்டும். இரவு 7-30—8-00 வரை 25, 31 ஆகிய சிற்றலை மீட்டரில் கேட்கலாம். ஒலிபரப்பைக் கேட்பவர்கள் தமது அபிப்பிராயங்களையும், ஆலோசனைகளையும் பின்வரும் முகவரிக்குத் தவறாமல் எழுதியனுப்பி உதவுங்கள்.

RADIO VERITAS-ASIA
Tamil Secrvic, Social Communications Center, 45, Kynsey Road, Colombo-8.

எஸ். உமாகாந்தன்,
தபாலகம், யாழ்ப்பாணம்.

0 0 0

## சோதிட ஆய்வு மன்ற விளக்கம்

சோதிடம் வானியலை அடிப்படையாகக்கொண்டது அதன்படி ஏப்ரல் 13ம்திகதி இரவு 8-29க்குதான் துர்மதி வருடம் பிறக்கிறது. மாலை 5-17க்கு அல்ல. 8-30—10-30 வரையுள்ள காலப் பகுதி மேஷத்துக்கு மத்திம நேரமாகக் குறிப்பிடப்பட்டமையில் எவ்வித தவறும் இல்லை செவ்வாய் (14-4-81) காலையே வருஷப்பிறப்புக் கொண்டாட்டங்கள் தொடங்கப்படவேண்டும்.

ஏப்ரல் 19ம் திகதியே வருஷக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டு, இலங்கை வானொலிகளால் நிகழ்த்தப்படு

(5ம் பக்கம் பார்க்க)

# நாடும் நடப்பும்....

சென்ற புதன்கிழமை நண்பகல் கோட்டை ரயில்நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் செல்லும்உத்தரதேவி ரயிலில்இடம் பிடிப்பதற்கு பிரயாணிகள் முண்டியடித்துக்கொண்டிருந்தனர் ஏகப்பட்ட கூட்டம். யாழ்ப்பாணத்துக்கு எத்தனை ரயில்கள் சேவையில் விடப்பட்டாலும், எத்தனை தனியார் பஸ்களும், மினிபஸ்களும் சேவையிலீடுபட்டாலும் சனக் கூட்டத்துக்குக் குறைச்சலில்லை. கூட்டம் அதிகம் என்றால் சிலருக்குக் கொண்டாட்டம்தான்.

தாயும் பிள்ளைகளுமாக ஒரு குடும்பம். பெண் பிள்ளைகள் நான்கு ஐந்து பேர். ஆண் பிள்ளைகள் இருவர். ரயிலில் இடம் பிடிப்பதற்காக ஆண் பிள்ளைகள் இருவரும் முண்டியடித்துக்கொண்டு ஏதோ ஒரு பெட்டிக்குள் ஏறிவிட்டனர். பெண் பிள்ளைகள் சூட்கேஸ்களைக் கையில் வைத்துக்கொண்டு அவதிப்பட்டனர். இந்த மாதிரிப் பிறர் கஷ்டப்படும்போது உதவி செய்வதற்கென்றே சிலர் ரயில் நிலையத்தில் நிற்பார்கள் "பிள்ளைகள் பெட்டிகளை யன்னலால் தாருங்கோ இங்கே வைக்கலாம்" என்று ரயில் பெட்டிக்குள் நின்ற ஒருவர் கேட்டார். அந்தப் பெண் பிள்ளைகளும் சூட்கேஸ்களை யன்னல் வழியாகக் கொடுத்தார்கள். அவரும் அவற்றை வாங்கி அங்குமிங்குமாக வைத்தார். அந்தப் பிள்ளைகளும் ஒருவாறாக உள்ளே வந்து சேர்ந்துவிட்டனர். இடம் பிடிப்பதற்காக முதலில் ஏறிய சகோதரர்களைத் தேடுவதிலும் ஆசனத்தில் அமருவதற்கும் வழி காண்பதிலும் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். முதலில் ஏறிய சகோதரர் முதல் கம்பார்ட்மெண்டில் இடவசதியிருப்பதாக வந்து சொன்னதும் அவர்கள் எல்லோரும் பெட்டிகளை எடுத்துக்கொண்டு அவசர அவசரமாகச் சென்றனர்!

சிறிது நேரத்தில் இரண்டு பெண்பிள்ளைகளும் இரு சகோதரர்களும் கலக்கத்தோடு அங்குமிங்குமாக ஓடித்திரிந்தனர். ஒவ்வொரு கம்பார்ட்மெண்டிலுமுள்ள ஆசனங்களுக்குக் கீழேயும் குனிந்து குனிந்து தேடினர்.

ஒரு பெரிய சூட்கேஸைக் காணோம்! யன்னல் வழியாக சூட்கேஸ்களை வாங்கி உதவி செய்த "ஆபத் சகாயனையும்" காணவில்லை!

வெளிநாட்டிலிருந்து வந்த ஒரு மகனை வரவேற்று வீடு திரும்பிக்கொண்டிருந்த குடும்பம் அது. புதுவருஷத்துக்கென விலையுயர்ந்த சேலைகளும்

(5-ம் பக்கம் பார்க்க)

## வண்ணை அம்பாளை வணங்குவமே

இராகம்: கல்யாணி, தாளம்: ஆதி

**பல்லவி**

வண்ணையில் அருளாட்சி செய்யுங் காமாட்சியே
வணங்கினேனுன் பாதமே மிகுவளமொடுநித மெழில் (வண்)

**அநுபல்லவி**

அன்னை நீதரும் காட்சி அகிலத்தே பெற்றோர்க்கு
ஆனந்தம் வேறுண்டோ அரிதான தேதுமுண்டோ (வண்)

**சரணம்**

சங்கரன் பங்குறையும் சுந்தரியே உமையே
சஞ்சலம் தீர்த்தருள்வாய் சந்ததம் நீ துணையே
மங்கள கல்யாணி மகேஸ்வரி மனோன்மணியே
மாதவத்தருள மமரு மாதங்கி ஆதரித்தெனையு
மாளுமானந்தி. (வண்)

- சங்கீத பூஷணம் -
ஏ கே. ஏரம்பமூர்த்தி.

]வண்ணை காமாட்சி அம்பாள் வருடாந்த உற்சவம் கடந்த 5ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இம்மாதம் 17ம் திகதி ரதோற்சவமும் 18ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறுகிறது.[

## அரசியல்வாதியும்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

திகளைவிட தனியார் பத்திரிகை தவறாகத் தயாரித்துத் தரும் செய்திகள் மேலானவை யென்றார்.

இலங்கையில் உழைக்கும் பத்திரிகையாளர் நிலைபற்றிக் கவலை தெரிவித்த அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் இவர்களின் நிலையை மேம்படுத்துவதற்குச் சில திட்டங்கள் தயாரித்துள்ளதாகவும் விரைவில் இவற்றைச் சமர்ப்பிக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர் தமது உரையை முடித்ததும் யாரும் விளக்கம் தேவையானால் கேட்கலாமென்றும் கேள்விகள் ஏதுவுமிருந்தாலும் கேட்கலாமென்றும் தலைவர் திரு. எஸ். பி அமரசிங்கம் அறிவித்தார்.

சில நிமிடங்கள் எவரும் எதுவும் கேட்கவில்லை. மௌனம்தான் நிலவியது. இச் சமயத்தில் எழுந்த இந்தியப் பத்திரிகை நிருபர் ஒருவர் கேள்வி கேட்பதற்கே அஞ்சுகிறார்களோ; இதற்கு அமைச்சர் குறிப்பிட்டதுபோல இங்குள்ள இரண்டு பெரிய பத்திரிகைகள் அரசின் கட்டுப்பாட்டிலிருப்பதுதான் காரணமோ? என்றுகேட்டார்.

இதற்குத் தலைவர் எஸ். பி. அமரசிங்கமே ஒரு விளக்கம் கொடுத்தார். இந்தியாவில் எந்தப் பிரச்சினையையும் பொறுமையாக ஆராய்ந்து பார்ப்பதில்லை. உடனடியாகவே எதிர்ப்பு; ஆர்ப்பாட்டம்; ஊர்வலம் என்று ஆரம்பித்துவிடுவார்கள். நமது நாட்டில் எதற்கும் அவசரப்பட்டு விடுவதில்லை அமைதியாக இருந்து பரிசீலனை செய்தபின்பே ஒரு முடிவுக்கு வருவது நமது மரபாகிவிட்டது. அமைச்சர் இங்கு தெரிவித்த கருத்துக்கள் பற்றி ஆறுதலாகச் சிந்தித்த பின்னரே அது பற்றிப் பரிசீலனை செய்வார்கள் என்றார்.

உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கும் பத்திரிகை நிறுவனத்தில்பணியாற்றும்லிகிதர்களுக்கும் வித்தியாசமிருக்க வேண்டுமென்று திரு. ஜோ. சிகேரா ஒரு கட்டத்தில் குறிப்பிட்டபோதும் பத்திரிகையாளரும் அரசியல்வாதிகளும் திமிர்பிடித்தவர்கள் என்று அமைச்சர் குறிப்பிட்டு தமது அனுபவத்தில் தாம் ஓர் அரசியல்வாதியைச் சந்திக்கச் சென்று அவருடைய போக்கும் பிடிக்காமல் வெடுக்கென்று வெளியேறிவந்து தமது பிரதம ஆசிரியரிடம் காரணம் கூறியதை இதர பத்திரிகையாளர் பாராட்டியபோதும் ஆசிரியர் தமக்கு ஐந்துரூபா தண்டம் விதித்ததாகக் கூறிய போதும் பத்திரிகையாளர்கள் சிரித்துக்கொண்டனர்.

“பாடசாலையின்

## உள்நிர்வாகத்தில் அபிவிருத்தி சபையினர் தலையிடக்கூடாது”

(யாழ்ப்பாணம்)

பெற்றோர் ஆசிரியர் சங்கங்களை பாடசாலை அபிவிருத்திச் சபைகள் என்று மாற்றியதன் மூலம்பல பாடசாலைகளில் பலவிதமானபிரச்சினைகள் தோன்றியுள்ளன. நலன்விரும்பிகள் என்ற போர்வையில் பாடசாலையுடன் எவ்வித தொடர்புமில்லாதவர்கள் பாடசாலை அபிவிருத்திச்சபைகளின் நிர்வாகத்தினுள் புகுந்து, பாடசாலைகளின் உள்நிர்வாகத்தில் தலையிடுவதனால் பல பாடசாலைகளில் குழப்பநிலை தோன்றியுள்ளது”

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த மகாசிவம்,கந்தர்மடம் சைவப்பிரகாசவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இ. த. ஆ. சங்க நல்லூர்க் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; பாடசாலை அபிவிருத்திச்சபையினரை பாடசாலையின் உள்நிர்வாகத்தில் தலையிட எந்தஅதிபரும் அனுமதிக்கக்கூடாது. வேலையில்லாது வீதியில் திரிபவர்களும் மதுவுகளில் மூழ்கியிருப்பவர்களும் தற்போது பாடசாலை அபிவிருத்திச்சபைகளின் முக்கிய நிர்வாகிகளாகச் சிலசமயங்களில் தெரிவுசெய்யப்படுகிறார்கள். இவர்கள் அப்பாடசாலையில் பெற்றோராகவோ அல்லது பழைய மாணவர்களாகவோ இல்லை. இவர்கள் பாடசாலை அபிவிருத்தியில் எவ்வித அக்கறையும் செலுத்தாது தங்களது சில சுயதேவைகளைப் பூர்த்திசெய்யுமுகமாக ஆசிரியர்களை பழிவாங்கமுயற்சிக்கிறார்கள்” என்று கூறினார்.

“தனியார் கல்வி நிறுவனங்கள்

## சமயக்கல்வியில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும்”

(யாழ்ப்பாணம்)

“தனியார் துறைக்கல்விநிறுவனங்கள் சமயக்கல்வியைப் புகட்டுவதில் அதிமுக்கிய கவனம் செலுத்தவேண்டும் அழிவுப்பாதையினின்றும் மனித சமுதாயத்தை திசை திருப்புவதற்குச் சமயம் ஒன்றினால்தான் முடியும்”

இவ்வாறு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ் ஹால் இன்ஸ்ரிரியூட் நிறுவன ஆதரவில் நடைபெற்ற திரு வி. ஆரோக்கியம் ஆசிரியரின் மாயா ஜாலக்காட்சி வைபவத்துக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஜே. பி. ஸி பிலிப்பேசுகையில் குறிப்பிட்டார் இந் நிறுவனத்தின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் டாக்டர் பிலிப் பாராட்டிப் பேசினார்.

இந் நிறுவனத்தின் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்காக நடைபெற்ற இம்மாயா ஜாலக் கண்காட்சியில் அரிய மாயாஜால வித்தைகளைக் காண்பித்த பௌதிகஆசிரியரான திரு வி. ஆரோக்கியத்திற்கு வெள்ளிக்கிண்ணம் பரிசளிக்கப்பட்டு “மாயா ஜாலப் பேரரசர்”பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ச-ம)

## “திருப்பாடுகளின் காட்சி”

(சுன்னாகம்)

உடுவில் மல்வம் பங்கு இளைஞர்கள் அளிக்கும் “பழி துடைத்த பலி” என்னும் திருப்பாடுகளின் காட்சி நாளை ஞாயிறு மாலை மல்வம் திருக்குடும்ப ஆலய மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. (து-ச)

## நாடும் நடப்பும்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

மற்றும் பொருள்களும் வைக்கப்பட்டிருந்த “மொடு” வான சூட்கேஸ்தான் மறைந்துவிட்டது சூட்கேஸினுள் இருந்த பொருள்களின் பெறுமதி பத்தாயிரம் ரூபாய்க்குமதிகமாக இருக்குமாம். மகிழ்ச்சியுடன் வந்த அந்தக் குடும்பம் பின்னர் களையிழந்துவிட்டது! ஆபத்சாயனுக்கு புதுவருஷம் அதிர்ஷ்டம்தான்!

உத்தரதேவி கொடிகாமத்தை நெருங்கிக்கொண்டிருக்கையில் மற்றொரு வயோதிபர் தனது சூட்கேஸையும் காணவில்லை என்று கவலையுடன் சொன்னார்.

சனக் கூட்டம் அதிகமான சமயத்தில் நல்லவர்கள்போல் நடித்துப் பெட்டியைத் தட்டிக்கொண்டுபோகும் பேர்வழிகள் இப்போது பெருகிவருகிறார்கள்! நீங்களும் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்பதற்காகவே இந்நிகழ்ச்சியை இங்கு தந்தேன்!

0 0 0

இ. போ. சபை பஸ் கண்டக்டர் வேலைதான் இப்போது சிறந்த வேலை என்றார் ஒரு நண்பர்.

“ஏன்? என்ன விஷயம்?” என்றேன்.

கொடுக்கும் டிக்கட்டுகளுக்குப் பயணிகள்தரும் பணத்துக்கு மிகுதி கொடுப்பதில் அவர்களுக்கு ஒரு நாளைக்குக் கிடைக்கும் வருமானம் அவர்களது குடும்பத்தின் அன்றாடச் செலவுக்கும் அவர்களது சொந்தச் செலவுக்கும் போக வங்கியிலும் சேமிக்கலாம் என்றார், நண்பர்.

அவ்வளவு தொகையாகவா வருமானம் வரும் என்றேன்.

கொழும்பு பஸ்களில் சேவை செய்யும் கண்டக்டர்களைப் பற்றித்தான் சொன்னேன் என்று கூறிய நண்பர், தாம் ஒரே நாளில் பத்து ரூபாய்க்கு மேல்அநாமத்தாய்க் கொடுத்துவிட்டதை அழாக்குறையாய் எடுத்துச்சொன்னார். பாஷைப் பிரச்சினையும் இதற்கு முக்கிய காரணம் என்றார் நண்பர்.

ஊர்சுற்றி

## கடத்தல் பிடிபட்டது

(கொழும்பு)

களுத்துறை அரசினர் சாராயக்குதத்திலிருந்து 4800போத்தல்சாராயம் மதுகமவிலுள்ள வெளிநாட்டுகுடிவகைவிற்பனை நிலையத்துக்கு அனுமதிப்பத்திரம் இல்லாது கடத்தப்படும்பொழுது மத்துகம பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக லொறிச் சாரதி, லொறிக் கிளீனர், குதத்தின் பாதுகாப்பு காவலாளர், குடிவகை விற்பனை நிலைய உரிமையாளர் ஆகிய நால்வர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். லொறியும், சாராயமும் பொலிஸ் பாதுகாப்பில் உள்ளன. மத்துகமபொலிசார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (து)

## சோதிட ஆய்வு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன என்றகருத்து ஆராய்ச்சிக்கு உரியனஅல்ல. கணிப்பும் பஞ்சாங்க ஆதாரமுமே ஆய்வுக்குரியன. வாக்கிய பஞ்சாங்க கணிப்பிலுள்ள அடிப்படைக் குறைபாட்டை எமது முந்திய பிரசுரம் தெளிவுபடுத்தியுள்ளது. இந்தியாவின் இந்துத் தலைமை நிறுவனங்களான காஞ்சி காமகோடி பீடம், தருமபுர திருப்பனந்தாள் ஆதீனங்கள் ஆகியவற்றின் முடிபுகளையும் இந்திய சோதிடப் பேரறிஞர்களின் ஆராய்ச்சி பூர்வமான முடிவான இந்திய அரசாங்க பஞ்சாங்க கருத்தையும் வாக்கிய பஞ்சாங்க கணிதர்கள் மறக்கிறார்களா? மேற்படி பீடமும் ஆதீனங்களும் இந்திய அரச பஞ்சாங்கமும் ஏப்ரல் 14ம் திகதியையே வருடப் பிறப்பு கொண்டாட்ட நாளாகக் கொண்டுள்ளன என்பதை இங்கு மீண்டும் வலியுறுத்துகிறோம்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகளும் இதேகருத்தை வெளியிட்டுள்ளார்.

நா. சுப்பிரமணியஐயர்,
தலைவர்,
இலங்கை சோதிட
ஆய்வு மன்றம்,
யாழ்ப்பாணம்.





இதோ, லக்ஸபானவிலிருந்து ஒரு புதிய,அதிக சக்திவாய்ந்த சாதனம்.
நீங்கள் அதிக நேரம் உங்கள் டிரான்ஸிஸ்டரை
துல்லியமாக கேட்டு மகிழ, இந்த புதிய லக்ஸபான பற்றறிக்கு நாம்
அரிய செயல்கள் பல செய்துள்ளோம்.

ஆகவே, நாடுங்கள் சக்தியை —
சக்தியின் சின்னம், புத்தம் புதிய லக்ஸபான டிரான்ஸிஸ்டர் பற்றறி.

பெயரைச் சொல்லிக் கேளுங்கள்,—புதிய லக்ஸபான டிரான்ஸிஸ்டர் பற்றறி.

அதிக சக்திக்கு — லக்ஸபான.

விலை: ரூபா 3-20 (ஒவ்வொன்றும்)

# 1983 பொதுத்தேர்தலில் 196 அங்கத்தவர்கள் தெரிவு

(கொழும்பு)

1983-ம் ஆண்டில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் 196 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு இலங்கைக் குடியரசின் பாராளுமன்றத்தில் இடம் பெறுவார்கள்.

இத்தேர்தல் 22 தேர்தல் மாவட்டங்களில் விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் நடைபெறவுள்ளது.

பாராளுமன்றத்தில் இடம் பெறும் 196 அங்கத்தவர்களில் 160 பேர் தொகுதிவாரியாகவுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். ஏனைய 36 பேரில் ஒரு மாகாணத்திற்கு நான்கு மேலதிக அங்கத்தவர்கள் என்ற அடிப்படையில் ஒன்பது மாகாணங்களிலிருந்து தெரிவுசெய்யப்படுவார்கள்.

1978-ம் ஆண்டு அரசியல் அமைப்புத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட தொகுதி நிர்ணய ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட அறிக்கையொன்றில் மேற்கண்ட விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இப்போதுள்ள அரசாங்க நிர்வாக மாவட்டங்களின் அடிப்படையிலேயே புதிய தேர்தல் மாவட்டங்கள் நிர்ணயிக்கப்படும். இரண்டு பிரதான மாற்றங்கள் இதில் மேற்கொள்ளப்படும்.

வடமாகாணத்தில் நான்கு நிர்வாக மாவட்டங்கள் இருக்கின்றபோதிலும் தொகுதி நிர்ணய ஆணைக்குழு அங்கு இரண்டு தேர்தல் மாவட்டங்களையே உருவாக்கியுள்ளது. ஒரு மாவட்டத்திற்கு யாழ்ப்பாண தேர்தல் மாவட்டமென்றும், மற்றையது வன்னித் தேர்தல் மாவட்டமென்றும் அழைக்கப்படும். மன்னார், வவுனியா, முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்கள் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் அடங்கும்.

அம்பாறை நிர்வாக மாவட்டத்தின் கீழ் அமைக்கப்படும் தேர்தல் மாவட்டத்திற்கு திகாமடுல்ல என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழு விடுத்த ஆலோசனையின் அடிப்படையிலேயே வடமாகாணத்தின் மூன்று மாவட்டங்களை ஒன்றிணைக்கும் தேர்தல் மாவட்டத்திற்கு வன்னி மாவட்டம் என்று பெயர் வழங்கப்பட்டிருப்பதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.


# 2-வது உலக சாதனை முயற்சியில் ஈடுபடுவார்

(யாழ்ப்பாணம்)

கிக்ஸ் கல்வி நிறுவனத்தின் ஆதரவில் உலகசாதனை வீரன் அ. ஸ்ரீகாந்த ராஜாவின் இரண்டாவது உலகசாதனை இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். கொலைவிலக்கி ஆரோக்கியமாதா தேவஸ்தான மைதானத்தில் ஆரம்பமாகிறது. இவர் 'இருந்து எழும்புதல்' உலக சாதனையை ஆரம்பிக்க இருக்கிறார். இரண்டு நிமிடத்தில் 225 தடவைகளுக்கு மேலாக இருந்து எழும்பிச் சாதனை நிலைநாட்ட முயல்வார்.

யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்பு மாணவரான இவர் மாணவ தலைவராகவும், உயர்தர மன்ற உபதலைவராகவும், வர்த்தக மாணவர்மன்ற உபதலைவரும், கிறிஸ்தவ மாணவர் மன்ற தலைவராகவும், செஞ்சுடர் வி. க. செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றார். இவருடைய முதலைய உலக சாதனை ஒற்றைறக்காலில் நிற்றல். இது உலக சாதனைகள் பதிவேடாகிய கினீஸில் இடம்பெற்றுள்ளது.

வைத்திய கலாநிதி ஜே. பி. ஸி. பிலிப் தலைமையில் நடக்கவிருக்கும் இந்நிகழ்ச்சியில் யாழ். மேயர் திரு. இராஜா விசுவநாதன், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். திரு. வி. ரி. சிவலிங்கம் பிரதம மத்தியஸ்தராகப் பணியாற்றுவார். திரு. எல். பக்கிரிசாமி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பார்.



அம்பாறை மாவட்ட அமைச்சர் திரு. பி. தயாரத்ன தலைமையிலான தூதுக்குழு அப்பகுதியின் வரலாற்று முக்கியத்துவத்தையும், தொல்பொருள் சிறப்பையும் கவனத்திற்கொண்டு அம்பாறையென்பதற்குப் பதிலாக திகாமடுல்ல என்று அழைக்க வேண்டும் என்று தெரிவித்த யோசனையின் பேரில் இம்மாற்றம் செய்யப்பட்டதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

# கீரிமலையில் புத்தாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கீரிமலை சிவநெறிக்கழக புத்தாண்டுவிழா இம்மாதம் 13ம் திகதி பிற்பகல் கீரிமலை நகுலேஸ்வரர் திருக்கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழகப் பிரதித்தலைவர் இலக்கண வித்தகர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நா. சுப்பிரமணிய ஐயர், திருமதி நித்தியவதி நித்தியானந்தம் உட்படப் பலர் உரையாற்றுவார்கள். (கு)

## கட்டிடவசதியின்மை ஆசிரியர் பற்றாக்குறை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் அரசினர்தமிழ் கலவன் பாடசாலையில் கட்டிட வசதியின்மையினாலும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

இப் பாடசாலையில் மனையியல், விவசாயம், வரைதல் போன்ற பாடங்களுக்கு தகுதியான ஆசிரியர்கள் இல்லை.

இப் பாடசாலையில் சூறாவளிக்கு முன்பு மூன்று கட்டிடங்கள் அமைந்திருந்தன. புயலால் அவை தரைமட்டமாகியதால் தற்போது சேரழிந்த ஓலைக் கொட்டில்களிலேயே வகுப்புகள் நடைபெறுகின்றன. புதிய கட்டிடங்கள் இதுவரை அமைக்கப்படவில்லை.

தற்போதுதான் கட்டிடங்கள் புனரமைக்கப் பட்டு வருகின்றன.

கட்டிட வசதியின்மையால் பாடசாலை உபகரணங்களை பாதுகாக்க தகுந்த இடமின்றி அயலிலுள்ளவீடுகளில் வைத்து பராமரிக்க வேண்டியுள்ளது. தளபாடப் பற்றாக் குறையும் இங்கு நிலவிவருகிறது.

## மண்டூர் கிராமத்தில் பரமஹம்ஸர் விழா

(மட்டக்களப்பு)

மண்டூர்-ஸ்ரீ இராமகிருஷ்ண மன்றத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தவித்தியாலயஇல்லத்தின் பழையமாணவர் சங்கம், பரமஹம்ச விழாவை மண்டூர்கிராமத்தில் இம்மாதம் 19ந் திகதி கொண்டாடும். இதற்கான சகல ஏற்பாடுகளையும் மண்டூர்-ஸ்ரீஇராமகிருஷ்ண மன்றத்தின் அமைப்பாளர் திரு. செழியன் பேரின்பநாயகம் மேற்கொண்டுவருகிறார்.

சிவானந்த வித்தியாலய இல்ல பழையமாணவர்சங்கம் இதுபோன்றவிழாக்களை மட்டக்களப்புமாவட்டத்தின் பல கிராமங்களிலும் நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளது.

மண்டூர் கிராமத்தில் நடைபெறவுள்ள இப்பெருவிழா, முழுநாள் நிகழ்ச்சியாக இடம்பெறும். காலையில் இராமகிருஷ்ணமன்ற நிலையத்தில் தியானபூசையும், பொங்கலும் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து விழா பொது விளையாட்டரங்கில் தொடங்கும். மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் ஜீவனானந்தஜி நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குவார்.





ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, & 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
5-வது ஜுவாலை வீசும் வாரமாக,
★ ரஜனி காந்த் ★ ஷோபா
★ ஸ்ரீபிரியா ★ சுமன்
★ சௌகார் ஜானகி நடித்த
தீ
இலங்கை-இந்திய தயாரிப்பு

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி ★ ஸ்ரீதேவி ★ பிரமிளா
★ சுந்தரராஜன் ★ விஜயகுமார்
★ ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்த
'தீப்பொறி' பறக்கும் வண்ணப்படம்
கவரிமான்

ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!! ஹவுஸ் புல்!!!
ராஜா யாழ்ப்பாணம் தினசரி 10-30, 2-15, 6-15, 9-30
சாந்தி மட்டுநகர் தினசரி 1-30, 5-00, 9-30



● பாக்யராஜ் ● ரதி ● சத்ரி
புதிய வார்ப்புகள்
(ஈஸ்ட்மன் கலர்) வயது வந்தவர்களுக்கு உகந்தது
டைரக்ஷன்: பாரதிராஜா இசை: இளையராஜா

## துணுக்காய் உ. அ.அ. பிரிவு விளையாட்டுப் போட்டி

(துணுக்காய்)

துணுக்காய் உதவிஅரசாங்க அதிபர்பிரிவு விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளன. மெல்வல்லுநர்போட்டிகள், உதைபந்தாட்டம் ஆண், பெண் சைக்கிள் ஓட்டப்போட்டிகள் என்பன நடைபெறவுள்ளதுஇதற்கான போட்டிகள் இவ்வாரஇறுதியில் நடைபெறவுள்ளன. போட்டிக்கான ஒழுங்குகளை துணுக்காய்ப்பிரிவுவிளையாட்டு உத்தியோகத்தரும், துணுக்காய்ப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. ம. கார்த்திகேசுவும் மேற்கொண்டுவருகிறார்கள்.

## இலட்சார்ச்சனை

(சுழிபுரம்)

சுழிபுரம்-பருளாய் சிவ சுப்பிரமணிய சுவாமி கோவில் இலட்சார்ச்சனை கடந்த ஞாயிற்றுக்கிழமைமுதல் நடைபெற்று வருகின்றது. தினமும் காலை, நண்பகல் இரவு வேளைகளில் அர்ச்சனை நடைபெற்று வருகின்றது.


வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
WINTER KILLS

லிடோ (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
பெரியஇடத்து பெண்

நாகமஹல் (கன்னாகம்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
பணத்தோட்டம்
(புதிய பிரதி)

வெல்லி (பருத்தித்துறை)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—சுஜாதா
தீபம்
(புதிய பிரதி-ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
மகத்தான 2-வது வாரம்
ரஜனிகாந்த்—ஷோபா நடித்த
முள்ளும் மலரும்
போன்: 351 (கலர்)



(சுழிபுரம்)

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் கடந்த மாதம் நடைபெற்ற சமயப்பிரசார விழாவில் தொடர்ந்து உரையாற்றிய 'சைவமணி' மு சபாரத்தினத்துக்கு, தேவஸ்தானம் சார்பில் யாழ் மாவட்ட நீதிபதி திரு. கி. பாலகிட்ணர், ''சித்தாந்தச் செம்மல்'' எனும் பட்டம் வழங்கி, பொன்னாடைபோர்த்துக் கௌரவிப்பதை இங்கு காணலாம்.

## சங்கச் செய்திகள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண கிராம அபிவிருத்திச் சங்க சன சமூக நிலைய புதிய நிர்வாகிகள்: தலைவர்: க. தியாகராசா, செயலாளர்: ப. பஞ்சலிங்கம், பொருளாளர்: க. கனகராசா, உபதலைவர்கள்: நா. கிருஷ்ணராசா, சு. இரத்தினசபாபதி, உப செயலாளர்: ஐ. வைத்திலிங்கம்.

ஊரெழு கணேச வித்தியாசாலை அபிவிருத்திச் சங்க புதிய நிர்வாகிகள் வருமாறு: தலைவர்: ச. கதிரவேலு, உபதலைவர்கள்: இ. பொன்னுத்துரை, அ. சு. த. கிருஷ்ணராசா, செயலாளர்: மூ. சங்கரப்பிள்ளை, உபசெயலாளர்: அ. கனகசூரியர், பொருளாளர்: சு. செல்லப்பா.

நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தான நடப்பு வருட நிர்வாகிகள்: தலைவர்: வே. சிவப்பிரகாசம், உபதலைவர்: ம. கிருஷ்ணசாமி, செயலாளர்: நா. கணேசு, உபசெயலாளர்: க. சி. தருமலிங்கம், தனாதிகாரி: அ. நல்லையா.

புத்தூர் லிங்கன் மத்திய சனசமூக நிலையத்தினதும் எவரெஸ்ற் விளையாட்டுக் கழகத்தினதும் நடப்பு வருட நிர்வாகிகள்:- தலைவர்: சோ. இராசலிங்கம், உபதலைவர்: மு. இரத்தினம், செயலாளர்: க. ஆனந்தமூர்த்தி, உபசெயலாளர்: இ. ரகுநாதன், பொருளாளர்; க. ஞானசேகரம், கணக்குப் பரிசோதகர்: சி. சந்திரசேகரம், விளையாட்டுக் கழகம்; கழகத்தலைவர்: ப. குணசேகரம், செயலாளர்: சி. யோகராசா, பொருளாளர்; மு யோகேஸ்வரன், காப்டன்; கி. யோகராசா.

வடஇலங்கை ஆயுர்வேத வைத்திய சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகள்; தலைவர்: டாக்டர் வி. எஸ். ஏகாம்பரம், உபதலைவர்: டாக்டர் ரி. புவிராசா, செயலாளர்: டாக்டர் வி. தில்லைச்சந்திரன், உபசெயலாளர்: டாக்டர் செல்வி எஸ். ராஜேஸ்வரி, பொருளாளர்: டாக்டர் செல்வி எஸ். தனபாலசரஸ்வதி. (து)

## தவக்கால நற்சிந்தனை

### இவர்களை மன்னியும்

இயேசு மூன்று ஆணிகளில் தொங்கிக்கொண்டிருந்த வேளையில் உச்சரித்த ஏழு வாக்கியங்களும் நம் எல்லாருக்கும் பொன்மொழியாக இன்றும் விளங்குகின்றன.

சிலுவையிலே தொங்கிநின்ற இயேசு எதிரிகளிடம் எரிந்து விழுவார் என எதிர்பார்த்தனர், அங்கே சூழ்ந்துநின்ற மக்கள். ஆனால் இயேசு தனது இறுதி வாக்கியங்களை ஒரு மன்றாட்டத்தோடு தொடக்குகின்றார். யாருக்காக இந்த மன்றாட்டு? தன் நேசத்தாய்க்காகவா? தன் நண்பர்களுக்காகவா? இல்லை. தன்னை நிந்தித்து, பழித்துரைத்து, வீண்குற்றம் சாட்டியவர்களுக்காக—தன்னை எதிர்ப்போருக்காக மன்றாடுகிறார். அதுவும் அவர்களை, தமக்கு தின்மை செய்தோரை மன்னிக்க இங்கு மன்றாடுகிறார். "இவர்கள் செய்வது என்னவென்று அறியாததால் பிதாவே, இவர்களை மன்னியும்...'

மன்னிப்பு கோழைத்தனமல்ல, பலவீனமுமல்ல, உயர்ந்த பண்பு அது. யாருக்கும் எளிதில் வரக்கூடியதுமன்று. களங்கமில்லா பிறர் அன்பிலிருந்து உற்பத்தியாகும் உயரிய பண்பிது.

இயேசுவின் பாடுகளை மரணத்தைச் சிந்திக்கும் இந்நாட்களில், சிலுவையும், சிலுவையில் அவர் வசனித்த வார்த்தைகளும் கற்பிக்கும் பாடங்களை சிந்தித்து செயல்படுத்தத் தீர்மானிப்போம். —இவர்களை மன்னியும்.

—அருட்திரு மேரி பஸ்ரியன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
5 காட்சிகள்
காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப் படுவதால் நேரம் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்.
விசாரணைக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் வீட்டிற்குள் வரும்போது நியாயங்கள் வீதிக்கு வருகின்றன! தாய்க்கு குற்றம் குற்றமே என்று சொன்ன அந்தக் குலமகளே குற்றங்கள் செய்யத் தயாரானாள். அப்போ கோமகன் என்ன செய்தான்? ... பாருங்கள் புரியும்
★ சிவாஜி கணேசன் ★ கே. ஆர். விஜயா
★ தேங்காய் சீனிவாசன் ★ மனோரமா ★ சுந்தரராஜன்
★ சுருளிராஜன் மற்றும் பலர் திறம்பட நடித்த
"ரிஷிமூலம்"
டைரக்ஷன் எஸ். பி. முத்துராமன்
(ஈஸ்ட்மன் கலர்)

பறவைகள் பறந்துவிடும்!............16-ல்
திசைமாறிய பறவைகள் கடைசித் தினம் 16-4-81
சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
திசைமாறிய பறவைகள்

## புத்தாண்டு விழா ரத்து

(யாழ்ப்பாணம்)

பொலிஸ்- பொதுமக்கள் நல்லுறவுக் குழு ஆதரவில் யாழ். முற்வெளி, திறந்தவெளி அரங்கு, குருநகர் ஆகிய இடங்களில் இம்மாதம் 12-ம் திகதி நடைபெறவிருந்த சிங்கள-தமிழ் புத்தாண்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)


# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்


## யாழ். பல்கலைக்கழக வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பகுதிச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று யாழ். நீதிமன்றத்தில்கூப்பிடப் பட்டு, ஜூன் மாதம் 1-ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)


## நியூ கேம்பிறிட்ஜ்

திருநெல்வேலிச் சந்தி

G. C. E. (A/L) 82

வர்த்தகம், விஞ்ஞானம்

**ஆரம்பம்: 14-4-81**

தாவரவியல் - சிவவீரசிங்கம், விலங்கியல்- ஜெகானந்தகுரு, பௌதிகம்: விமல்ராஜ், இரசாயனம்: அன்ரன் மாஸ்ரர், தூயகணிதம், பிரயோக கணிதம் - பிரபல ஆசிரியர், கணக்கியல்; பாலா மாஸ்ரர், அளவையியல், வர்த்தகம், பொருளியல் - பிரபல ஆசிரியர்கள்.


### ---பண்டா-செல்வா ஒப்பந்தத்துக்கும்---

# மா. அபி. சபை முறைக்கும் எதுவித ஒற்றுமையுமில்லை!

## அரச அதிபர்கள் மாநாட்டில் ஜே. ஆர்.

(கொழும்பு)

பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கும் புதிய அபிவிருத்திச் சபை முறைக்கும் எதுவித ஒற்றுமையும் கிடையாது.

இவ்வாறு ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தன கொழும்பில் நடைபெற்ற அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் பேசுகையில் கூறினார்.

திரு. ஜெயவர்த்தன மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இந்த நாட்டில் ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கும் சர்வாதிகாரத்தை எதிர்க்கவும் நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

கடந்த ஆட்சிக் காலத்தில் அவசரகால நிலை மாதாமாதம் நீடிக்கப்பட்டது. அந்த நீடிப்பை விரும்பாத எதிர்க் கட்சிகள் பலமுறை கேட்டும் கூட அவசரகால நிலை குறித்து விவாதிக்க அன்றைய அரசு மறுத்துவிட்டது.

சுதந்திரம் நவீன நாகரிகத் சிறந்த அம்சமாகும். எனவே தான் நாம் மக்களின் சுதந்திரத்தை மதித்து செயல்படுத்தி வருகிறோம்.

மாவட்ட சபையின் தொடர்பாக முன்னர் செய்துகொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கும் இன்றைய மாவட்ட அபிவிருத்திச்சபைகளுக்கும் எவ்விதத்திலும் ஒற்றுமை கிடையாது.

முன்னைய அரசுகளும் சிறந்த நிர்வாகம் கருதி மாவட்ட சபைகளை ஏதோ ஒருவகையில் ஏற்படுத்த முயன்றன. எனினும் எவருக்கும் வெற்றி கிட்டவில்லை, (இ)

## குட்டிமணி விசாரணை--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை இவ்விதமிருக்க, நீர்வேலியில் நடைபெற்ற மிகப் பெரிய வங்கிக்கொள்ளை சம்பந்தமாக பொலிஸார் நடத்தி வரும் விசாரணையில் புதிய திருப்பம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

நீர்வேலியில் இடம் பெற்ற 81 லட்சம் ரூபா கொள்ளை தொடர்பாக, வங்கி அதிகாரிகளினால் சரியான கணக்கை உடனடியாக வெளியிடமுடியாதது குறித்து பொலிசாருக்கு இப்பொழுது சந்தேகமேற்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

வங்கிக்கிளைகளில் பணம் வசூலிப்பது பற்றியும், வங்கிகளுக்கும் பணமெடுக்கச் செல்லும் நேரகாலம் தொடர்பாகவும் சிலவங்கி ஊழியர்களுக்கும், இப்பணத்தைக் கொள்ளையடித்தவர்களுக்குமிடையில் தொடர்பிருந்திருக்க முடியுமா என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இக்கொள்ளை நடைபெற்றவுடன் 68 லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டதாகவும், பின்னர் 79 லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டதாகவும் இறுதியில் 81 லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டதாகவும் வங்கி அதிகாரிகள் பலவேறு விதமாக கணக்கு விபரங்களை வெளியிட்டிருந்தமை தெரிந்ததே. இதுவே பொலிஸாருக்கு இப்பொழுது சந்தேகத்தை கிளப்பிவிட்டிருக்கிறது.

நிலைமை இவ்வாறிருக்க, அண்மையில் வடபகுதியில் நிகழ்ந்த பல குற்றச்செயல்கள் சம்பந்தமாக 8 பேரை விசாரணை செய்துவரும் குற்றப்புலனாய்வுத்துறைப் பொலிசாருக்கு பல முக்கிய தகவல்கள் கிடைத்திருப்பதாக அறியப்படுகிறது.

## ஆசிரியர் சம்பளம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விஷயம் தொடர்பாக வடமாநில கல்வி அதிபதியை வடமாகாண அதிபர் சங்கத் தூதுக்குழு சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது.

வடமாநிலக் கல்வி அதிபதி யாழ்ப்பாண பொலிஸ் அத்தியட்சருடன் தொடர்பு கொண்டு இந்த ஒழுங்குகளைச் செய்திருப்பதாக வ.மா. ஆ. ச. செயலாளர் திரு வ. மகாதேவன் தெரிவித்தார்.

## விற்பனைக்கு


அரியாலை, கண்டிவீதியில் பூதேயு சொரூபத்துக்கு எதிரில் நாலு பரப்புக்காணி சிறிய கடைக்கட்டிடத்துடன் விற்பனைக்குண்டு நல்ல விலை கோருபவர்கள் தொடர்பு கொள்ளவும். 123 பிரதான வீதி, யாழ்ப்பாணம். 8852


## இந்த வித்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது வேண்டுமென்று செய்யப்படும் விஷமத்தனமா அல்லது தமிழ் சொற்களைச் சிங்களப்படுத்தித்தான் எழுதவேண்டும் என்ற ஒரு நியதியைப் பரீட்சைத் திணைக்களம் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளதா என்று மாணவிகளின் பெற்றோர் கேட்கின்றார்கள்!


யாழ்ப்பாணம் - மட்டுநகர் பயணிகளுக்கு

"காங்கேசன் ரவல்ஸ்" அளிக்கும்

# புத்தாண்டுப் பரிசு!

## யாழ். - மட்டுநகர் பஸ் சேவை

எதிர்வரும் 15-4-81 புதன்கிழமை தொடக்கம் கீழ்க்காணும் நேரசூசியின்படி வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன பஸ் வண்டிகளில் பயணிகளுக்கு சகல வசதிகளுடனும் சௌகரியங்களுடனும் திறமையும் அனுபவமும் வாய்ந்த பஸ் குழுவினராலும் உத்தியோகத்தர்களாலும் மிகவும் திறமையான சேவை வழங்கப்படும்.

| புறப்படும் நேரங்கள் | | | சென்று அடையும் நேரங்கள் | | |
|---|---|---|---|---|---|
| காங்கேசன்துறை | பி. ப. | 5-00 மணி | மட்டுநகர் | காலை | 4-00 மணி |
| யாழ்ப்பாணம் | ,, | 6-00 ,, | மட்டுநகர் | ,, | 5-00 ,, |
| மட்டுநகர் | ,, | 7-00 ,, | காங்கேசன்துறை | ,, | 6-00 ,, |

உங்கள் ஆசனங்களை முன்கூட்டியே கீழ்க்கண்ட இடங்களில் பதிவு செய்யலாம்.

1. காங்கேசன் ரவல்ஸ், பிரதான வீதி, காங்கேசன்துறை. தொலைபேசி இல: 34
2. குணம்ஸ் பான்ஸி, இல. 175, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
3. ராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், மட்டக்களப்பு. தொலைபேசி இல: 335
4. சாந்தி சினிமா, மட்டக்களப்பு. தொலைபேசி இல: 2912

கட்டணம்:-

| | | | |
|---|---|---|---|
| காங்கேசன்துறை | — | மட்டுநகர். | 52 ரூபா |
| யாழ்ப்பாணம் | — | மட்டுநகர் | 50 ரூபா |

உங்கள் பொதிகளை பாதுகாப்பாகவும் சௌகரியமாகவும் கொண்டு செல்வதற்கு விசேட வசதிகள் பஸ் வண்டியில் செய்யப்பட்டுள்ளது. மிக விரைவில் பகல் சேவையும் ஆரம்பிக்கப்படும். பயணிகளுக்கு திறமையான சேவையை வழங்கும் குறிக்கோளுடனே இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரத்தியேக வாடகைக்கும் பஸ் வண்டிகள் விடப்படும்.

பிரயாணிகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே காப்புறுதி செய்யப்பட்ட சேவை.

# காங்கேசன் ரவல்ஸ்

122, பிரதான வீதி, காங்கேசன்துறை.


## மரண அறிவித்தல்

### பொன்னையா வைத்திலிங்கம்

திருநெல்வேலி வடக்கு பொன்னையா வைத்திலிங்கம் காலமானார். இவர் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், குலத்துங்கனின், அன்புத்தந்தையும், செல்வலட்சுமி மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும். கந்தசாமியின் மருமகனும் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் களஞ்சியப் பொறுப்பாளர்பாலசுப்பிரமணியம், திருமதி சிவகுரு, திருமதி மகாலிங்கம், கோண்டாவில் இராமகிருஷ்ணமிஷன் ஆசிரியர் பரமநாதன், யாழ் சிங்கள மாகவித்தியாலயம் விஜயேந்திரன் ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் சனிக்கிழமை மாலை 2-00 மணியளவில் திருநெல்வேலியில் நடைபெறும்.

ம. பாலசுப்பிரமணியம்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு.

## மரண அறிவித்தல்

### திருமதி அமிர்தலட்சுமி தம்பு

நவாலி காலஞ்சென்ற அம்பலவாணர் சிதம்பரப்பிள்ளை தம்புவின் அன்பு மனைவி அமிர்தலட்சுமி சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற நாகேஸ்வரி இராசேந்திரம், குணபூஷணி சடாச்சரம் ஆகியோரின் அன்புத்தாயாரும் வி. விஜயரத்தினத்தின் சகோதரியுமாவார். ஈமைக்கிரியைகள் நாளை (12-04-81) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

வேதக்குட்டி வளவு,
நவாலி, மானிப்பாய்.
8853

[illegible] ஏப்பிரல் 11-ம் திகதி [illegible] வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No QJ [illegible] The Eelanaadu [illegible] 9, Telegram "Eelanaadu" Phone 389 / 8186